செய்தி வெளியீடு எண்:82 நாள்:29.07.2019

## பத்திரிக்கை செய்தி

## புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்கத்தின் அடிப்படையில் **"புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்"** என்ற திட்டமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2012-13-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினை இவ்வாண்டு செயல்படுத்த சென்னை மாவட்டத்தில் தொழில் துவங்குவோருக்கு தொழிற்கடன் பெற்றுத்தந்து மானியம் வழங்க ரூ.581.00 லட்சம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்து இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு தமிழக அரசின் 25% அதிக பட்சமாக ரூ.30 லட்சம் மானியம், மேலும் வங்கிகள் வழங்கும் கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டியில் 3% வட்டி மானிய உதவியும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தொழில் முனைவோரின் தொழில் திட்ட மதிப்பீடு குறைந்த பட்சம் 10 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும், அதிக பட்சம் தொழில் திட்ட மதிப்பீடு வரம்பு ரூபாய் 5 கோடி ஆகும். இத்திட்டத்தின் மூலம் கடன் பெற விரும்புவோர் முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருக்க வேண்டும், கல்வி தகுதிகள்: அரசு அங்கீகாரம் பெற்ற பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழில் நுட்ப பயிற்சி (ஐடிஐ) / தொழில் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 21 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். பொது பிரிவினருக்கு வயது 35-க்குள் இருக்க வேண்டும். பெண்கள் / தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / திருநங்கையர் / மாற்றுத் திறனாளிகள் / முன்னாள் ராணுவத்தினர் வயது 45-க்குள் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் கடனுதவி பெறும் நபர்களுக்கு 15 நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தில் 50% பெண் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மத்திய அல்லது மாநில அரசின் கடனுதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற இயலாது. தானியங்கி உதிரி பாகங்கள், உணவுப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், இயந்திர பாகங்கள் போன்ற உற்பத்தி தொழில்களுக்கும் உணவகங்கள், மருத்துவமனைகள், உடற்பயிற்சி நிலையங்கள், கணிணி சேவை மையங்கள், புகைப்பட நிலையங்கள், அச்சகங்கள், போன்ற சேவைத் தொழில்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்கள் பெறலாம்.

மேற்கண்ட தகுதிகள் உடைய தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் https://msmeonline.tn.gov.in/needs/index.php என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களை பெற கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் அமைந்துள்ள மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகி அல்லது 22501620, 22501621, 22501622 என்ற தொலைபேசி எண்களின் மூலமாக அணுகி விண்ணப்பித்து பயன்பெறலாம்.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மண்டல இணை இயக்குநர்,
A-30, திரு.வி.க தொழிற்பேட்டை
கிண்டி, சென்னை 600 032.

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு ஆலுவலர்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,சென்னை-01**